இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

# கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2021 / 2022

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 16.01.2024 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

| | | |
|---|---|---|
| **தேவைப்படும் தகைமைகள்** | : | க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2021 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| **கட்டணம்** | : | **ரூபா. 150,000.00** |
| **மொழி மூலம்** | : | கற்கைநெறியின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்கள் தமிழ் ஆங்கில மொழிகளிலும் நடைபெறும். |
| **தெரிவு செய்யப்படும் முறை** | : | நேர்முகப்பரீட்சை மற்றும் நுழைவுப்பரீட்சை |
| **விண்ணப்ப முடிவுத் திகதி** | : | **16.01.2024** |

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1500.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டினை (Paying-In-Voucher - PIV) பூரணப்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **கணக்கு இலக்கம் 228-1001-6000-1692 ற்கு** செலுத்த முடியும். விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்வதோடு அதனை பூர்த்தி செய்து **பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு - 2021 / 2022"** எனக்குறிப்பிட வேண்டும். அத்துடன் இணையத்தளத்திலுள்ள **Google Form** ( https://forms.gle/DLt2afXgHcgRPQLq6 ) னை தவறாது நிரப்புதல் வேண்டும்.

**குறிப்பு:**

- செலுத்தப்பட்ட கட்டணங்கள் எக்காரணங்கள் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
- பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்